**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 207/2018 P.W. 4/L.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெகன் சந்திரகுமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கராஜ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.02.025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான தங்கவேல் முருகன் என்பவரை எனக்குத் தெரியும். 28.10.2016 ம் தேதி நான் வேலை முடித்து இரவு 09.45 முதல் 10.00 மணியளவில் லெட்சுமிபுரம் ஜங்சனில் இருந்து என்னுடைய வீட்டிற்குச் செல்லும் பாதையில் கருமண்கூடல் ஊரைச் சேர்ந்த மகேஸ்வரி என்பவர் பஸ் இல்லை என்பதால் கருமண் கூடல் ஊருக்கு சென்று விடும்படி கேட்டார்.

2. நானும் அவரை எனது இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு லெட்சுமிபுரம் ஜங்சனை தாண்டிச் செல்லும் போது எங்கள் முன்னால் ஆல்டோ கார் ஒன்று சென்றுக்கொண்டிருந்தது. அந்த காரின் முன்பு தங்கவேல் முருகன் என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார். தங்கவேல் முருகன் அவரது இருசக்கர வாகனத்தை வளைத்து, வளைத்து ஓட்டிச் சென்றுள்ளார்.

3. லெட்சுமிபுரம் காலேஜ்ஜ தாண்டி 200 மீட்டர் தொலைவில் தங்கவேல் முருகன் இருசக்கர வாகனத்தை நிறுத்தி ஆல்டோ காரில் வந்தவர்களுக்கும் அவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இரவு 10.00 மணி என்பதால் வேறு என்ன நடந்தது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நான் மண்டைக்காடு துணை தலைவராக இருந்ததால் அவர்களிடம் சென்று பேசி சமாதானம் செய்து வைத்தேன். மேலும், காயம் ஏற்பட்டிருந்த தங்கமணி என்பவரை மருத்துவமனைக்கு செல்லும்படி கூறினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

அ.சா1 தங்கமணி எனது உறவுக்காரர் இல்லை. சம்பவம் நடந்து முடிந்தவுடன் வண்டியை திருப்பிக்கொண்டு குளச்சல் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். வேறு யாரும் 3 வது நபர்கள் அங்கிருந்தார்களா என்றால் 10.30 மணி ஆகிவிட்டதால் நான் கிளம்பி விட்டேன். மகேஸ்வரியும், முருகேசனும் வந்திருந்தார்கள். சம்பவயிடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். 3, 4 வீட்டுக்காரர்களை எனக்குத் தெரியும். வாகனத்திற்குள் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 207/2018 P.W. 5/L.W.6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சந்திரசேகர் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.02.025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. 29.10.2016 ம் தேதி மதியம்01.00 மணியளவில் போலீசார் லெட்சுமிபுரம் கல்லூரி அருகே பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னுடன் ராஜரெத்தினம் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

அ.சா1 தங்கமணி எனது சித்தப்பா ஆவார். ராஜரெத்தினம் எனது நண்பர் ஆவார். குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.